# திருச்செங்கோடு நகராட்சி

# நிர்வாக அறிக்கை

# 2019–2020

# *நிர்வாக அறிக்கை*

## *2019–2020*

***(1) அமைப்பு:–***

13.3.1965ம் தேதிய உள்ளாட்சித்துறை அரசு ஆணை எண்.613–ன்படி 1.4.1965ம் தேதி முதல் நகராட்சி நிலையாக உயர்த்தப்பட்டது

சென்னை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசு ஆணை எண்.498, நாள் 29.3.1984ன்படி இந்நகராட்சி முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசாணை (நிலை) எண்.85, நாள் 22.5.98ன்படி, இந்நகராட்சி தேர்வு நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது.

திருச்செங்கோடு, சீத்தாராம்பாளையம், கைலாசம்பாளையம் மற்றும் முத்தனம்பாளையம் ஆகிய நான்கு வருவாய் கிராமங்களை உள்ளடக்கி 25.20 சதுர கிலோ மீட்டர் பரப்பு கொண்டதாகும். அறிக்கை ஆண்டில் நகராட்சி எல்லையில் மாறுதல் ஏதும் இல்லை.

***(2) மக்கள் தொகை***

2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கின்படி, திருச்செங்கோடு நகராட்சிப் பகுதியில் மக்கள் தொகை ஆண்கள்–47810, பெண்கள்–47525 = ஆக மொத்தம் 95335 ஆகும்.

***(3) நகராட்சி தேர்தல் – நகர்மன்றம்***

இந்நகர்மன்றத்திற்கு 17.11.2011ம் அன்று மாநில தேர்தல் ஆணையத்தின் உத்திரவுப்படி நகர்மன்ற உறுப்பினர்களுக்கு கட்சி அடிப்படையில் தேர்தல் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட நகரமன்ற உறுப்பினர்களின் பதவி காலம் 24.10.2016ல் முடிவுற்றதால் அரசாணை எண்.146, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.24.10.2016ன்படி தனி அலுவலர் நியமனம் செய்யப்பட்டுள்ளது.

இந்நகர்மன்றத்தின் 33 வார்டுகளில் தாழ்த்தப்பட்ட பிரிவு, பொது மற்றும் பெண்கள், பெண்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டுகள் விபரம்

| மொத்த வார்டுகள் | தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டுகள் (பொது) | தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டுகள் (பெண்கள்) | பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டுகள் (பொது) | பொதுவான வார்டுகள் |
|---|---|---|---|---|
| 33 | 31, 33 | 3,13 | 6, 7, 11, 15, 16, 17, 19, 20, 21, 23, 24, 25, 26, 29, 30 | 1, 2, 4, 5, 8, 9, 10, 2, 14, 18, 22, 27, 28, 32 |

***(4) நகராட்சி ஆணையாளர்***

| வ.எண். | ஆணையர் பெயர் | அறிக்கையாண்டில் பணிபுரிந்த காலம் |
|---|---|---|
| 1 | திரு.பொ.வேலாயுதம்<br>நகரமைப்பு அலுவலர் மற்றும் ஆணையாளர்(பொறுப்பு) | 01.04.2019 முதல் 22.08.2019 வரை |
| 2 | திரு.ஜி.சுகுமார்<br>நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர்(பொறுப்பு), | 22.08.2019 முதல் 19.11.2019 வரை |
| 3 | திரு.அ.வ.சையத் முஸ்தபா கமால்,<br>ஆணையாளர் | 19.11.2019 முதல் 31.03.2020 வரை |

***(5) மன்றக் கூட்டங்கள்***

(அ) அறிக்கை ஆண்டில் மொத்தம் 16 சாதாரண மன்றக் கூட்டங்கள் நடைபெற்றது.

(ஆ) மொத்தம் 482 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(இ) மன்றக் கூட்டங்கள் நடத்துவதற்கான அமைந்த விதிமுறைகள் பின்பற்றப்பட்டன.

***குழு உறுப்பினர்கள் விபரம்:—***

1.4.2019 முதல் 22.08.2019 முடிய திரு.பொ.வேலாயுதம் நகரமைப்பு அலுவலர் மற்றும் ஆணையாளர்(பொறுப்பு), 22.08.2019 முதல் 19.11.2019 வரை திரு.ஜி.சுகுமார் நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர்(பொறுப்பு), 19.11.2019 முதல் 31.03.2020 வரை திரு.அ.வ.சையத் முஸ்தபா கமால், ஆணையாளர் ஆகியோர்கள் அறிக்கையாண்டு முடிய வகித்துள்ளனர்.

7) ***அறிக்கையாண்டில் நடத்தப்பட்ட குழுக்கள் கூட்டத்தின் எண்ணிக்கை, முடிவு செய்யப்பட்ட பொருள்கள் விபரம்***

| குழுவின் பெயர் | நடைபெற்ற கூட்டங்கள் | முடிவு செய்யப்பட்ட பொருள்கள் |
|---|---|---|
| அ. நியமனக்குழு | 2 | 6 |
| ஆ.ஒப்பந்தக்குழு | இல்லை | இல்லை |
| இ.வரிமேல்முறையீட்டுக்குழு | இல்லை | இல்லை |

***(8) மேலாண்மை***

பதிவேடுகள் மற்றும் படிவங்கள், கணினி உபகரணங்கள் வாங்கியது, அச்சடித்து பெற்ற வகையில் அறிக்கையாண்டில் ரூ.15.75/– இலட்சம் செலவு செய்யப்பட்டது.

**நிர்வாக பிரிவு**

| வ.எண் | பெயர் மற்றும் பதவி | அறிக்கையாண்டில் பணிபுரிந்த காலம் |
|---|---|---|
| 1 | திருமதி.கா.அம்சவேணி, மேலாளர் | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| 2 | திருமதி.அ.வசந்தா, கணக்கர் | 01.04.2019 முதல் 11.03.2020 வரை |
| 3 | திரு.ச.பிரகாஷ், இளநிலை உதவியாளர் கணக்கர்(பொ) | 12.03.2020 முதல் 31.03.2020 வரை |

| வ.எண் | பெயர் பதவி | இருக்கை எண் | அறிக்கையாண்டில் பணிபுரிந்த காலம் |
|---|---|---|---|
| 1 | திரு.ச.ரஜினிசீலன், உதவியாளர் | அ1, சி1, என்1 | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| 2 | திரு.து.சுந்தரம், இளநிலை உதவியாளர் | பி1 | 01.04.2019 முதல் 17.10.2019 வரை |
| | | புதிய பேருந்து நிலைய வசூல் | 18.10.2019 முதல் 16.12.2019 வரை |
| | | இ2 | 17.12.2019 முதல் 31.03.2020 வரை |
| 3 | திரு.எஸ்.மோகன், இளநிலை உதவியாளர் | அ3 | 01.04.2019 முதல் 16.12.2019 வரை |
| | | பி2 | 17.12.2019 முதல் 31.03.2020 வரை |
| 4 | திரு.ச.பிரகாஷ், இளநிலை உதவியாளர் | இ1 | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| | | பி2 | 01.04.2019 முதல் 03.10.2020 வரை |
| 5 | திரு.எஸ்.கே.யுவராஜன், இளநிலை உதவியாளர் | எச்2 | 01.04.2019 முதல் 16.12.2019 வரை |
| | | எச்1 | 17.12.2019 முதல் 31.03.2020 வரை |
| 6 | திரு.வி.சீனிவாசன், இளநிலை உதவியாளர் | எப்1 | 01.04.2019 முதல் 16.12.2019 வரை |
| | | எச்2 | 17.12.2019 முதல் 31.03.2020 வரை |
| 7 | திருமதி.ம.சுகவனேஸ்வரி, இளநிலை உதவியாளர் | எச்1 | 01.04.2019 முதல் 03.07.2019 வரை |
| | | அ2 | 03.07.2019 முதல் 17.10.2019 வரை |
| | | எச்1 | 17.10.2019 முதல் 16.12.2019 வரை |
| | | அ2 | 17.12.2019 முதல் 31.03.2020 வரை |

| | | | |
|---|---|---|---|
| 8 | திரு.ஆர்.கண்ணன், இளநிலை உதவியாளர் | பி3 | 01.04.2019 முதல் 20.05.2019 வரை |
| | | எப்2 | 21.05.2019 முதல் 31.03.2020 வரை |
| | | பி2 | 04.07.2019 முதல் 17.10.2019 வரை |
| 9 | திரு.ஸ்ரீராம்சுதிர், இளநிலை உதவியாளர் | எப்2 | 01.04.2019 முதல் 20.05.2019 வரை |
| | | பி3 | 21.05.2019 முதல் 31.03.2020 வரை |
| 10 | திரு.ஆர்.விக்னேஷ்ராஜா, இளநிலை உதவியாளர் | அ2 | 01.04.2019 முதல் 03.07.2019 வரை |
| | | எச்1 | 04.07.2019 முதல் 17.10.2019 வரை |
| | | அ2 | 18.10.2019 முதல் 16.12.2019 வரை |
| | | எப்1 | 17.12.2019 முதல் 31.03.2020 வரை |
| 11 | திருமதி.ஆர்.சுமதி, இளநிலை உதவியாளர் | இ2 | 01.04.2019 முதல் 03.07.2019 வரை |
| | | அ4 | 03.07.2019 முதல் 16.12.2019 வரை |
| | | அ1 | 17.12.2019 முதல் 31.03.2020 வரை |
| 12 | திருமதி.டி.சிந்துசாலினி, இளநிலை உதவியாளர் | அ4 | 01.04.2019 முதல் 03.07.2019 வரை |
| | | இ2 | 04.07.2019 முதல் 16.12.2019 வரை |
| | | பி1 | 17.12.2019 முதல் 31.03.2020 வரை |
| 13 | செல்வி.க.சுபலட்சுமி, இளநிலை உதவியாளர் | புதிய பேருந்து நிலைய கணினி வசூல் | 03.07.2019 முதல் 17.10.2019 வரை |
| | | பி1 | 18.10.2019 முதல் 16.12.2019 வரை |
| | | புதிய பேருந்து நிலைய கணினி வசூல் | 17.12.2019 முதல் 31.03.2020 வரை |

**கணினி பிரிவு**

| வ.எண் | பெயர் மற்றும் பதவி | அறிக்கையாண்டில் பணிபுரிந்த காலம் |
|---|---|---|
| 1 | திரு.து.தியாகராஜன், உதவித் திட்ட அமைப்பாளர் | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| 2 | திருமதி.ஆர்.ரோஜா, புள்ளிவிவரக்குறிப்பாளர் | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |

**வருவாய் பிரிவு**

| வ.எண் | பெயர் மற்றும் பதவி | அறிக்கையாண்டில் பணிபுரிந்த காலம் |
|---|---|---|
| 1 | திரு.டி.சீனிவாசன், வருவாய் உதவியாளர், (வருவாய் ஆய்வர் பொறுப்பு) | 01.04.2019 முதல் 04.12.2019 |
| 2 | திரு.வெ.கோபி, வருவாய் ஆய்வாளர் | 06.12.2019 முதல் 31.03.2020 வரை |

| வ.எண் | வருவாய் உதவியாளர் பெயர் | வார்டு பொறுப்பு | அறிக்கையாண்டில் பணிபுரிந்த காலம் |
|---|---|---|---|
| 1) | திரு.ஆ.குணசேகரன் | 1, 8, 17, 24 | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| 2) | திரு.வி.நாகராஜன் | 2, 18, 19, 20, 21 | 04.12.2019 முதல் 31.03.2020 வரை |
| 3) | திரு.த.கோவிந்தராஜன் | 27, 28, 29 | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| 4) | செல்வி.ம.அகிலாண்டேஸ்வரி | 11, 12, 13, 14, 15 | 08.11.2019 முதல் 31.03.2020 வரை |
| 5) | திரு.ஆனந்தகுமார் | 23, 25, 26 | 08.11.2019 முதல் 31.03.2020 வரை |
| 6) | திரு.க.குணசேகர் | 6, 7, 9, 10, 16 | 08.11.2019 முதல் 31.03.2020 வரை |
| 7) | திரு.பி.ராஜா | 3, 4, 5, 22 | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| 8) | திரு.ஆர்.வினோத் | 30, 31, 32, 33 | 08.11.2019 முதல் 31.03.2020 வரை |

**பொறியியல் பிரிவு**

| வ.எண் | பெயர் மற்றும் பதவி | வார்டு பொறுப்புகள் | அறிக்கையாண்டில் பணிபுரிந்த காலம் |
|---|---|---|---|
| 1 | திரு.ஜி.சுகுமார் நகராட்சி பொறியாளர் | | 01.04.2019 முதல் 19.11.2019 வரை |
| 2 | திரு.எம்.குணசேகரன், நகராட்சி பொறியாளர் | | 27.11.2019 முதல் 31.03.2020 வரை |
| 3 | திரு.எம்.கண்ணன், உதவிப் பொறியாளர் | 1 to 17 | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| 4 | திரு.பி.செல்வம், இளநிலை பொறியாளர் | 18 to 33 | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |

| | | | |
|---|---|---|---|
| 5 | திரு.பி.வெங்கடாஜலம், குழாய் பொருத்துனர் | 18 to 33 | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| 6 | திரு.கார்த்திகேயா, குழாய் பொருத்துனர் | 1 to 17 | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| 7 | திருமதி.பி.உமாராணி, பணி ஆய்வர் | | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |

**3. நகரமைப்பு பிரிவு**

| வ.எண் | பெயர் மற்றும் பதவி | வார்டு பொறுப்புகள் | அறிக்கையாண்டில் பணிபுரிந்த காலம் |
|---|---|---|---|
| 1 | திரு.பொ.வேலாயுதம், நகரமைப்பு அலுவலர் | | 01.04.2019 முதல் 22.08.19 வரை |
| 2 | திரு.கே.குணசேகரன், நகரமைப்பு ஆய்வாளர் (நகரமைப்பு அலுவலர், கூ(பொ)) | | 22.08.20 முதல் 31.03.2020 வரை |
| 1 | திரு.என்.சீனிவாசன், நகரமைப்பு ஆய்வர் | 1 to 17 | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| 2 | திரு.கே.குணசேகரன், நகரமைப்பு ஆய்வர் | 18 to 33 | 04.09.2019 முதல் 31.03.2020 வரை |

**4. பொது சுகாதாரப்பிரிவு**

| வ.எண் | பெயர் மற்றும் பதவி | வார்டு பொறுப்புகள் | அறிக்கையாண்டில் பணிபுரிந்த காலம் |
|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.சுருளிநாதன், துப்புரவு அலுவலர் | | 01.04.2019 முதல் 15.11.2019 வரை |
| 2 | திரு.மூ.நிருபன்சக்ரவர்த்தி, துப்புரவு ஆய்வர் (துப்புரவு அலுவலர் கூ(பொ)) | 23 to 33 Div-III | 15.11.2019 முதல் 13.12.2019 வரை |
| 3 | திரு.அ.ஜான்ராஜா, துப்புரவு ஆய்வர் | 1 to 22 Div- I, II, III | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| | திரு.அ.ஜான்ராஜா, துப்புரவு ஆய்வர் (துப்புரவு அலுவலர் கூ(பொ)) | 1 to 33 Div- I, II, III | 13.12.2019 முதல் 31.03.2020 வரை |
| 4 | திரு.குணசேகரன், துப்புரவு பணி மேற்பார்வையாளர் | 1, 2, 5, 6, 8, 18 Div-I | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| 5 | திருமதி.வி.காளியம்மாள், துப்புரவு பணி மேற்பார்வையாளர் | 3, 4, 19, 20, 22 Div-I | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| 6 | திரு.வி.ராமகிருஷ்ணன், துப்புரவு பணி மேற்பார்வையாளர் | 12, 13, 14, 15, 29 Div-II | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| 7 | திரு.என்.துரைசாமி, துப்புரவு பணி மேற்பார்வையாளர் | 7, 9, 10, 11, 16, 17 Div-II | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| 8 | திரு.எஸ்.பழனிசாமி, துப்புரவு பணி மேற்பார்வையாளர் | 25, 26, 27, 28, 30 Div-III | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| 9 | திரு.அருள்முருகன், துப்புரவு பணி மேற்பார்வையாளர் | 21, 23, 24, 31,32, 33 Div-III | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| 10 | திரு.பா.விஸ்வநாத், களப்பணி உதவியாளர் | 18 to 33 | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| 11 | திரு.பி.நேருசுகம், களப்பணி உதவியாளர் | 1 to 17 | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |

## ஓட்டுநர்கள்

| வ.எண் | வாகனத்தின் எண் | ஓட்டுநர் பெயர் | ஆறிக்கையாண்டில் பணி புரிந்த காலம் |
|---|---|---|---|
| 1 | TN34D1996 | திரு.பழனிசாமி | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| 2 | TN34D3972 | திரு.டி.பி.பெருமாள் | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| 3 | TN34D3973 | திரு.மோகன்ராஜ் | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| 4 | TN34AA9084 | திரு.குழந்தைவேல் | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| 5 | TN34AC1105 | ஒப்பந்த பணியாளர் | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| 6 | TN34AC1120 | திரு.எம்.மணிகண்டன் | 14.11.2019 முதல் 31.03.2020 வரை |
| 7 | TN34AC1162 | ஒப்பந்த பணியாளர் | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| 8 | TN34AC1165 | ஒப்பந்த பணியாளர் | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| 9 | TN34AC1167 | ஒப்பந்த பணியாளர் | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| 10 | TN34AC1183 | ஒப்பந்த பணியாளர் | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| 11 | TN34U5398 | திரு.கண்ணன், தூ.ப | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| 12 | TN34F3741 | திரு.வெங்கடேசன் | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| 13 | TN28T8966 | திரு.கே.ராமு | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| 14 | TN28T8967 | திரு.மாதேஸ்வரன் | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| 15 | TN34R1275 | திரு.கண்ணன், தூ.ப | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| 16 | TN34R3567 | திரு.வாசுதேவன் | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| 17 | TN34K8439 | திரு.சுந்தரராஜ் | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| 18 | TN34R1365 | திரு.கண்ணன், தூ.ப | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| 19 | TN34K8237 | திரு.கணசேமூர்த்தி | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| 20 | TN34T999 | திரு.முருகேசன் | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| 21 | TN28W3234 | திரு.டி.எல்.சுப்ரமணி | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |

| | | | |
|---|---|---|---|
| 22 | TN34E8523 | ஒப்பந்த பணியாளர் | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| 23 | TN28T8436 | திரு.இளங்கோவன், தூ.ப | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |
| 24 | TN28W5257 | திரு.உதயகுமார் | 01.04.2019 முதல் 31.03.2020 வரை |

**<u>இ–கவர்னென்ஸ் (கணிணிமயப்படுத்துதல்) 2019–2020</u>**

திருச்செங்கோடு நகராட்சியில் அனைத்துப் பணிகளையும் கணினி மயப்படுத்துதலின் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையரகத்தால் உருவாக்கப்பட்ட UTIS – CWBS(Urban Tree Information System) திட்ட செயலாகத்தின் வழிகாட்டுதலின் படி கணினிமயப்படுத்துதல் நடைபெற்று வருகிறது. கணிணி மயப்படுத்துதலை செயல்படுத்தவேண்டி ஒரு உதவித்திட்ட அமைப்பாளர் மற்றும் புள்ளிவிபரக் குறிப்பாளர் பணிபுரிந்து வருகின்றனர். நகராட்சியின் பணிகள் கீழ்க்கண்டவாறு படிப்படியாக கணினி மயப்படுத்தப்பட்டு வருகிறது.

ஆன்லைன் மூலம் செயல்படுத்துதல்:https://tnurbaneseva.tn.gov.in/

1. சொத்துவரி
2. குடிநீர்க் கட்டணம் வசூலித்தல் மற்றும் நிர்வகித்தல்
3. தொழில்வரி
4. இதர வரியினங்கள் ( கடை வாடகை மற்றும் குத்தகை இனங்கள்)
5. பிற வருவாய் இனங்கள்
6. பணியாளர்களின் சம்பளப்பட்டியல்கள் தயாரித்தல்
7. நகராட்சியின் இயல்பு நிலை கணக்கு முறை
8. செலவு இனங்கள்
9. பிறப்பு இறப்பு சான்றிதழ்கள் பதிவு மற்றும் வழங்குதல்
10. அபாயம் மற்றும் அருவருக்கத்தக்க தொழில்கள் மற்றும் உணவு கலப்படத் தடுப்பு சட்டத்தின் கீழ் உரிமம் வழங்குதல்
11. நகராட்சியில் இயங்கும் வாகனங்களின் இயக்க பதிவுகள்
12. நகராட்சியால் பெறப்படும் புகார் மனுக்கள்
13. தனியார் கட்டிட அனுமதி வழங்குதல்
14. வழக்குகள்
15. தணிக்கை
16. நகராட்சியில் மேற்கொள்ளப்படும் பணிகள்
17. திடக்கழிவு மேலாண்மை
18. பதிவேடு பராமரித்தல்

19. நகர்மன்ற கூட்ட நடவடிக்கை

அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பயன்பாட்டு எண், ரகசியக் குறியீடு வழங்கப்பட்டு அவரவர்குரிய பணிகளை அவர்களே நடைமுறைப்படுத்துதலும், Flow மூலம் மேல் அலுவலர்களின் அங்கீகாரம் (Approve) பெறப்பட்டு சிறந்த முறையில் காலதாமதம் இல்லாமல் செயல்பட்டு வருகிறது.

<u>ஆப்–லைன் மூலம் செயல்படுத்துதல்</u>

1. மின் மற்றும் குடிநீர் வழங்கும் பொருட்கள் பதிவுகள்
2. நகராட்சியின் அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் பதிவுகள்

நகராட்சியால் பொதுமக்களின் வசதிக்காக நகராட்சி வளாகத்தில் ஒரு கணினி சேவை மையம் மற்றும் வரிவசூல் மையமும், புதியபேருந்து வளாகத்தில் ஒரு கணினி வரிவசூல் மையம் சிறப்பாக செயல்பட்டு 2019–2020ல் நடப்பில் 77.73 சதவீதம் வரி வசூல் நடப்பு கேட்பில் வசூல் செய்யப்பட்டு உள்ளது. மேலும், நகராட்சியின் அனைத்து விபரங்கள் இண்டர்நெட்டில் http://www.tnurbantree.tn.gov.in/tiruchengode/ என்னும் இணையத்தளத்தின் வாயிலாக அவ்வப்பொழுது புதுப்பிக்கப்பட்டும் பதிவேற்றம் செய்யப்பட்டும் 2019–2020ம் ஆண்டில் சுமார் 6000க்கும் மேற்பட்ட பார்வையாளர்களால் பார்வையிடப்பட்டுள்ளது. பொதுமக்கள் தங்கள் குறைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்க தமிழக அரசின் இணையத்தளத்துடன் இணைந்த வசதியுடன் http://eservices.tn.gov.in/ulb-grievances/ என்னும் இணையத்தளத்தின் வாயிலாக புகார்கள் பெறப்பட்டு அதற்கான தீர்வுகளை உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்படுகிறது. நடப்பு நிதியாண்டில் அம்மா சேவை மையம் உருவாக்கப்பட்டு பயன்பாட்டிலும் உள்ளது. கம்பியில்லா இணைப்பு (Wireless) மூலம் பேருந்து நிலைய வசூல் மையமும், அம்மா உணவகமும் இணைக்கப்பட்டு அலுவலகத்தில் 20 CCTV வசதியும், வருகை பதிவுகளை Finger Print கருவி மூலம் பதியும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், 2015–2016ம் ஆண்டில் நகராட்சி நிர்வாக ஆணையரகத்தால் அறிமுகம் செய்யப்பட்ட இ–டெண்டர் வசதியும் ( http://tntenders.gov.in/ ) ஏற்படுத்தப்பட்டு இ–டெண்டர்களும் செயல்படுத்தப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. வரும் காலங்களில் பொறியியல் பிரிவில் மேற்கொள்ளப்படும் பணிகள் அனைத்தும் கணினிமயபடுத்த நகராட்சியால் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், தமிழக அரசின் TNSWAN என்னும் அனைத்து துறை இணைப்புக்கான நெட்வொர்க் வசதி சுமார் ரூ.4 இலட்சம் செலவில் அரசால் செய்து தரப்பட்டுள்ளது. மேலும், அனைத்து திட்ட பணிகள், DCB போன்றவைகளை உடனுக்குடன் http://tnurbanepay.tn.gov.in/ என்னும் இணையதளம் வாயிலாக பிறப்பு/இறப்பு சான்றிதழ்களை இலவசமாகப் பதிவிறக்கம் செய்யவும், Online மூலம்

வரிகள் மற்றும் கட்டிட உரிமங்கள் விண்ணப்பங்கள் பெறப்பட்டு கணினி மூலம் தீர்வு செய்யப்படுகிறது.

## 9. பணிகள்

### 1) தூய்மை இந்தியா இயக்கம் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–19

தூய்மை இந்தியா இயக்கம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மொத்தம் 9 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு 7 பணிகள் முடிவுற்று 2 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது.

7வது மாநில உயர்மட்டக் குழு பரிந்துரையின்படி

| வ.எண் | பணியின் பெயர் | எண்ணிக்கை | மதிப்பீடு இலட்சத்தில் | பணி நிலை |
|---|---|---|---|---|
| **Micro Compost Center With other Infrastructure Facilities** | | | | |
| 1 | **Construction of 3 TPD Micro Compost center with compound wall & Approach Road at New Busstand North side Open Space** | 1 | 52.00 | பணி முடிக்கப்பட்டது |
| 2 | **Construction of 3 TPD Micro Compost center with compound wall & Approach Road at Kollapatti Housing Board D Type (Nesavalar Colony)** | 1 | 52.00 | பணி முடிக்கப்பட்டது |
| 3 | **Construction of 3 TPD Micro Compost center with compound wall & Approach Road at Sanarpalayam Park (Malaisuthi Road)** | 1 | 52.00 | பணி முடிக்கப்பட்டது |
| 4 | **Construction of 3 TPD Micro Compost center with compound wall & Approach Road at Koottapalli Park (Sanarpalayam Barial Ground)** | 1 | 52.00 | பணி நடந்து வருகிறது |
| 5 | **Construction of 3 TPD Micro Compost center with compound wall & Approach Road at Kollapatti C Type Park (Office Backside)** | 1 | 40.00 | பணி முடிக்கப்பட்டது |
| **Procuremnet of Primary Collection Vehiles** | | | | |
| 6 | **Supply and Delivery Of Battery Operated Vehicle 0.40 to 0.60 MT 38 nos.** | 1 | 68.40 | பணி முடிக்கப்பட்டது |
| 7 | **Supply and Delivery Of Light Compound Used** | 1 | 33.60 | பணி முடிக்கப்பட்டது |
| **Bio Mining** | | | | |
| 8 | **Removal Of Legacy Waste 26574 Cum Dumped In The Animoor Compost Yard Through Bio-Mining Process** | 1 | 175.0 | பணி நடந்து வருகிறது |
| 9 | **Supply and Delivery Of Battery Operated Vehicle 0.40 to 0.60 MT 12 nos.** | 1 | 12.60 | பணி முடிக்கப்பட்டது |
| | **Total** | **9** | **537.60** | |

**2) TURIP 2019-20**

தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் **2019–2020**ன் கீழ் ரூ.**1000.00** இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் **5** சிப்பங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**3) 14th CFC**

**14** வது மத்திய நிதி ஆணையம் நிதியின் கீழ் ரூ.**291.85** இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலை, மழைநீர் வடிகால் மற்றும் கல்வெட்டு அமைக்க **13** பணிகளுக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

**4) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2019–2020 :**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் **2019–2020**ஆம் ஆண்டில் பணிகள் ரூ.**106.30** இலட்சத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | எண்ணிக்கை | மதிப்பீடு ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | மழைநீர் வடிகால் | 2 | 10.40 |
| 2 | சிமெண்ட் சாலை | 6 | 41.10 |
| 3 | கழிப்பிடம் | 5 | 31.00 |
| 4 | நியாயவிலைக் கடை | 2 | 9.00 |
| 5 | மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி | 2 | 14.00 |
| 6 | LED விளக்கு | 1 | 0.50 |
| 7 | தார்சாலை | 7 | 39.80 |
| | மொத்தம் | 24 | 145.80 |

***5) ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் 2018–19 மற்றும் 2019–2020 (ICDS)***

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் **2018–19** மற்றும் **2019–2020**ன் கீழ் **4** அங்கன்வாடி மையம் பராமரிப்பு பணி ரூ.**8.00** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

***6) ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டம் (IUDM)***

ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டம் **2018–19**ன் கீழ் ரூ.**441.00** இலட்சம் மதிப்பீட்டில் அனிமூர் உரக்கிடங்கில் “Faecal Sludge Treatment Plant 40 Kld” அளவில் கட்டப்பட்டு வருகிறது.

***7) சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான மேம்பாட்டுத் திட்டம் (UIDSSMT Under TUFIDCO Loan)***

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான மேம்பாட்டுத் திட்டம் **2018–19**ன் கீழ் TUFIDCO மூலம் வட்டியில்லா கடனாக ரூ.**378.17** இலட்சம் பெற்று "Providing Internal Plumbing Works for 12761 Nos. House Scheme Connections (HSC)" பணி ரூ.**438.00** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு **31.03.2020** வரை **1560** வீட்டு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டு பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

***<u>8) ஒருங்கிணைந்த IUDM 2018-19 மற்றும் 2019–2020</u>***

ஒருங்கிணைந்த IUDM 2018-19 மற்றும் **2019–2020**ன் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நாமக்கல் மூலம் ரூ.**83.85** கோடி மதிப்பீட்டில் திருச்செங்கோடு நகராட்சிக்கென தனிக்குடிநீர் திட்டம் செயல்படுத்தும் பணிகள் **80%** முடிவடைந்து தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

***<u>9) வறட்சி நிவாரணநிதி 2019</u>***

வறட்சி நிவாரணநிதியின் கீழ் ரூ.**50.00** இலட்சம் மதிப்பீட்டில் **3** பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.

*<u>10) பயணியர் விடுதிகள்</u>*

இந்நகராட்சியால் பயணியர் விடுதி ஏதும் பராமரிக்கப்படவில்லை. இந்நகரில் நெடுஞ்சாலைத்துறையால் ஒரு பயணியர் விடுதி தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

*<u>11) விளக்கு வசதி</u>*

நகராட்சி சாலைகளில் கீழ்க்கண்டவாறு தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1) | சோடியம் வேப்பர் விளக்குகள் | 359 |
| 2) | உயர் கோபுர விளக்குகள் (LED) | 4(12) |
| 3) | குழல் விளக்குகள் | 2968 |
| 4) | CFL வேப்பர் விளக்குகள் | 329 |
| 5) | LED விளக்குகள் | 1466 |
| | மொத்தம் | 5134 |

*<u>ஒப்பந்தப்பணி (பொறியியல் பிரிவு)</u>*

**19.08.2019** முதல் மூன்று ஆண்டுகளுக்கு அனைத்து நகராட்சி வார்டுகளிலும் உள்ள **5134** தெருவிளக்குகள் தனியார் மூலம் திரு.எஸ்.யுவராஜ், ஒப்பந்ததாரர் என்பவருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது

*<u>குடிநீர் விநியோகம்</u>*

திருச்செங்கோடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தற்சமயம் இரு திட்டங்கள் மூலம் காவிரி தலைமை நீரேற்றும் நிலையம் ஆவத்திபாளையம் ஆற்றிலிருந்து நீர் எடுக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கூட்டு குடிநீர் திட்டம் மூலம் **2.50** MLD-யும் நகராட்சி மூலம் பராமரிக்கப்படும் பொன்விழா ஆண்டு குடிநீர் திட்டத்தின் மூலம் **10.50** MLD-ம் குடிநீர் கிடைக்கப்பெற்று மக்களுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு **126** லிட்டர் வீதம் **33** வார்டுகளில் **4** நாட்களுக்கு ஒருமுறை பாதுகாக்கப்பட்ட குடிநீர் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் குடிநீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளில் இந்நகராட்சி இரண்டு குடிநீர் லாரிகள் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் ஒருங்கிணைந்த IUDM 2018-19 மற்றும் **2019–2020**ன் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நாமக்கல் மூலம் ரூ.**83.85** கோடி மதிப்பீட்டில் திருச்செங்கோடு நகராட்சிக்கென தனிக்குடிநீர் திட்டம் செயல்படுத்தும் பணிகள் **80%** முடிவடைந்து தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

***13) கல்வி (துவக்கப்பள்ளி)***

**31.3.1990** வரை நகராட்சி நிர்வாகத்தில் **5** தொடக்கப் பள்ளிகளும், **7** நடுநிலைப் பள்ளிகளும் நடந்து வந்தன. இவைகள் **1.4.1990** முதல் கல்வித்துறையின் கீழ் இயங்கி வருகிறது. இது தவிர தனியார் நிர்வாகத்தில் **3** தொடக்கப் பள்ளிகளும், **4** நடுநிலைப் பள்ளிகளும் உள்ளன.

***14) தமிழ்நாடு அரசு பள்ளிச் சத்துணவு திட்டம்***

இந்நகராட்சியின் கட்டுப்பாட்டின் கீழ் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத் திட்டத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் **21** சத்துணவு மையங்கள் செயல்பட்டு வருகிறது.

அறிக்கையாண்டில் சத்துணவு மையங்களுக்கு உணவூட்டு செலவினம் மொத்தம் ரூ. **842210/–** மான்யம் பெறப்பட்டு இத்திட்டத்திற்கு செலவிடப்பட்டது.

பயன்பெற்ற மாணவ, மாணவியரின் எண்ணிக்கை **2636** ஆகும். மேற்படி மையங்களுக்கு போதுமான முழுமான்யம் அரசாங்கத்தால் வழங்கப்பட்டு வருகிறது.

***15) மேல்நிலைப்பள்ளி***

இந்நகராட்சியால் உயர்நிலைப் பள்ளி ஏதும் நடத்தப்படவில்லை. இந்நகராட்சிப் பகுதிகளில் அரசினர் மேல்நிலைப்பள்ளி இரண்டும், தனியார் மேல்நிலைப் பள்ளி இரண்டும் ஆக நான்கு பள்ளிகளும் நடைபெற்று வருகிறது.

***16) பொது நலம்***

இந்நகராட்சி பகுதி வார்டு எண்.**5**, நெசவாளர் காலனியில் நகராட்சியில் தாய்சேய் நல விடுதி பராமரிக்கப்பட்டு வருகிறது. அதில் ஒரு நகர சுகாதார செவிலியர் பணிபுரிந்து வருகிறார் மற்றும் (NRHM) நகர்நல மையம் ஒன்று தாய்சேய் நல விடுதியில் இணைந்து செயல்படுகிறது. அதில் ஒரு மருத்துவர், ஒரு மருந்தாளுநர், ஆய்வக உதவியாளர் மற்றும் இரண்டு மருத்துவ பணியாளர்களைக்கொண்டு மருத்துவப் பணி நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது.

**2019–2020**ஆம் ஆண்டில் பிரசவங்கள் அனைத்தும் அரசு மருத்துவமனையில் நல்லமுறையில் பார்க்கப்பட்டுள்ளது. மற்றும் சீத்தாராம்பாளையம், சூரியம்பாளையம் ஆகிய இரண்டு (NRHM) நகர் நல மையத்தில் வெளிப்புற நோயாளிகள் நல்ல முறையில் சிகிச்சை பெற்று பயன்பெற்றுள்ளனர்.

***அமைப்பும், பணியாளர்களும்:—***

அறிக்கையாண்டில் இந்நகராட்சியில் ஒரு துப்புரவு அலுவலர், 2 துப்புரவு ஆய்வர்கள் ஆறு துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், ஓட்டுநரில் 14 பேரும், 133 துப்புரவு பணியாளர்களும், ஒரு துலக்குநர் மற்றும் நகரசுகாதார செலவியர் பணியாற்றி வந்துள்ளனர்.

***பிறப்பு, விகிதமும், இறப்பு விகிதமும்***

அறிக்கையாண்டில் 1386 பிறப்புகள் பதிவு செய்யப்பட்டது. முந்தைய ஆண்டில் 1317 பதிவாகியுள்ளது. அறிக்கையாண்டில் 668 இறப்புகள் பதிவாகியுள்ளது. பிறப்பு, இறப்பு பதிவுகளை மூன்று பிரிவுகளாக துப்புரவு ஆய்வாளர்கள் கவனித்து வந்தனர்.

***மகப்பேறு உதவி***

அறிக்கையாண்டில் மகப்பேறு உதவித் தொகை எதுவும் இந்நகராட்சியால் வழங்கப்படவில்லை.

***உரக்கிடங்கு***

அனிமூரில் உரம் தயார் செயயப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. புதியதாக 11.04 ஏக்கர் பரப்பளவில் உரக்கிடங்கு உள்ளது. ரூ.28,000/— உரம் விற்கப்பட்டுள்ளது.

***மலேரியா***

அறிக்கையாண்டில் 93 மருந்து தெளிக்கும் பணியாளர்களும் இரண்டு களப்பணி உதவியாளரும் பணியாற்றினர். அறிக்கையாண்டில் இத்திட்டத்திற்கு ரூ.41,57,865/— செலவிடப்பட்டது. இத்திட்டத்திற்கு அரசு மான்யம் வரப்பெறவில்லை.

***துப்புரவு பிரிவு***

நகரில் ஆண்கள், பெண்கள் உபயோகத்திற்கென பொதுக் கழிப்பிடங்களும், கட்டணம் செலுத்தி ஆண், பெண் தனித்தனியே உபயோகிக்கக்கூடிய மூன்று நவீனக் கழிப்பிடங்களும் நகராட்சி பேருந்து நிலையம், பழைய பேருந்து நிலையம் மற்றும் நெசவாளர் காலனி ஆகிய இடங்களில் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

ஆண் துப்புரவு பணியாளர்களுக்கு தலா இரண்டு செட் பாலியஸ்டர் சீருடையும், 2 மீட்டர் தலைப்பாகை துணியும், பெண் துப்புரவு பணியாளர்களுக்கு தலா 2 கைத்தறி பாலியஸ்டர் சேலையும், 2 மீட்டர் தலைப்பாகையும் இலவசமாக வழங்கப்பட்டது. மேலும் ஓட்டுநர், அலுவலக உதவியாளர்களுக்கு தலா இரண்டு செட் சீருடை வழங்கப்பட்டுள்ளது.

அறிக்கையாண்டில் துப்புரவு பணிக்கென 1 பெரிய டிப்பர் லாரியும் 8 LCV ஆட்டோக்கள், ஒரு கழிவுநீர் ஊர்தி இரண்டு டம்பர் பிளேசர் , ஒரு காம்பேக்டர் லாரி மூலம் 54 காம்பேக்டர் பின்கள் பொதுசுகாதாரத்திற்கு பயன்படுத்தப்பட்டன.

இந்நகர எல்லைக்குள் துப்புரவு பணியாளர்களைக் கவனிக்க அனுமதிக்கப்பட்ட 235 துப்புரவு பணியிடங்களில் 140 பணியாளர்கள் மட்டும் பணியாற்றி வந்தனர்.

***ஒப்பந்தப்பணி (பொது சுகாதாரப்பிரிவு)***

02.01.2019 முதல் ஓராண்டிற்கு அனைத்து நகராட்சி வார்டுகளிலும் துப்புரவு பணி மேற்கொள்ள தனியார் மூலம் திரு.கே.குமார், ஒப்பந்ததாரர் என்பவருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு 105 தூய்மை பணியாளர்களை கொண்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், 01.09.2019 முதல் ஓராண்டிற்கு அனைத்து நகராட்சி வார்டுகளிலும் துப்புரவு பணி மேற்கொள்ள தனியார் மூலம் திரு.கே.குமார், ஒப்பந்ததாரர் என்பவருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு கூடுதலாக 100 தூய்மை பணியாளர்களை கொண்டு தூய்மை பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், 01.06.2019 முதல் ஓராண்டிற்கு அனைத்து நகராட்சி பள்ளிகளை பராமரிக்கும் பொருட்டு திரு.கே.குமார், ஒப்பந்ததாரர் என்பவருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு 42 தனியார் பணியாளர்களை கொண்டு ஒப்பந்தம் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

***உணவுப் பொருட்கள் கலப்படம்***

உணவு பொருள் மாதிரிகள் எடுக்கவென தனியான ஆய்வாளர்கள் உணவுக்கட்டுப்பாட்டு அலுவலகம் மூலம் தனியாக செயல்பட்டு வருகிறது.

***கேடும் அருவருப்பும் தரும் தொழில்கள்:—***

கேடும், அருவருப்பும், தரும் தொழில்கள் நடக்கும் இடங்களை இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளர்களால் காலமுறைப்படி பார்வையிட்டு உரிய கட்டணம் வசூலிக்கப்படுகிறது. 2019—20 ரூ.2,92,233/— வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது.

***காட்சிக் கடைகளும், திருவிழாக்களும்***

அறிவிக்கப்பட்ட திருவிழா இந்நகரில் நடைபெறவில்லை. ஸ்ரீ அர்த்தநாரீஸ்வரர் தேர்த் திருவிழா முக்கிய திருவிழா ஆகும். ஒவ்வொரு ஆண்டும் வைகாசி மாதம் தேர்த் திருவிழா நடைபெறும், திருவிழாக்காலத்தில் இந்நகரின் சுற்றுப்புற கிராமங்களிலிருந்து மக்கள் ஏராளமாக கலந்துகொள்வார்கள். திருவிழாக்காலத்தில் உரிய சுகாதார ஏற்பாடுகள் செய்யப்பட்டது. விழாக்காலத்தில் நிறுவப்பட்ட கடைகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமை ஏலத்தில் விடப்பட்டு ரூ.6,90,900/— ஏலம் போனது.

***வடிகால்***

இந்நகரில் விரிவான புதை வடிகால் திட்டம் ஏதுமில்லை.

***<u>17) பொது நலமும், பாதுகாப்பும்</u>***

தமிழ்நாடு தீயணைக்கும் படை இந்நகரில் 1986–87ம் ஆண்டில் துவக்கப்பட்டு இயங்கி வருகிறது.

***<u>18) போக்குவரத்து</u>***

இந்நகர்மன்றத்தால் பேருந்து போக்குவரத்து எதுவும் நடத்தப்படவில்லை. தனியார் மற்றும் அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளால் இந்நகரம் பயனடைந்து வருகிறது.

***<u>ஆ. வாரச்சந்தை</u>***

இந்நகர்மன்றத்தால் வாரச் சந்தை ஒன்று நடத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் அறிக்கையாண்டில் கிடைத்த வருமானம் ரூ.6,90,900 /– ஆகும்.

<u>வரியில்லா இனங்கள்</u>

இந்நகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் பழைய கடைகள் மற்றும் புதிய கடைகள் ஒரு உணவு விடுதியும் உள்ளது. புதிய பேருந்து நிலையத்தில் கடைகள்.74ம், உணவு விடுதிகள் இரண்டு ஆகியவை டிஎன்யுடிஎப் திட்டத்தின் மூலம் கட்டப்பட்டவையாகும். சுமையுந்து நிலையத்தில் கடைகள், குடோன்கள், தங்கும் அறைகள், உணவு விடுதி ஆகியவை உள்ளது. இந்நகராட்சியில் சீத்தாராம்பாளையம், அம்மன குளக்கடைகள், வணிக வளாகம், சின்னத் தெப்பக்குள அடித்தள மற்றும் முதல் தள கடைகள் உள்ளது. மொத்த அறிக்கையாண்டில் இந்நகராட்சி வரியில்லா இனங்கள் மூலம் ரூ.2,21,66,742/– வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

***<u>மிதிவண்டி நிலையம்</u>***

இந்நகராட்சி புதிய பேருந்துநிலையம் அருகில் இருசக்கர வாகனங்கள் நிறுத்த மிதிவண்டி நிலையம் ஒன்று நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. அறிக்கை ஆண்டில் இதன் மூலம் ரூ.10,29,000 /– வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

***<u>புதிய பேருந்து நிலையம் சுங்கம் வசூல்</u>***

புதிய பேருந்துநிலையத்தில் பேருந்துகள் வந்து செல்ல சுங்கம் வசூல் செய்யும் உரிமையானத்தில் அறிக்கை ஆண்டில் ரூ.16,84,725 /– வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

*கட்டணக் கழிப்பிடம்*

இந்நகராட்சி புதிய மற்றும் பழைய பேருந்துநிலையம் மற்றும் நெசவாளர் காலனியில் பொதுமக்கள் வசதிக்காக ஆண், பெண் இருபாலருக்கும் இரண்டு கட்டணக் கழிப்பிடங்கள் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட இரண்டு கட்டண கழிப்பிடங்கள் மூலம் அறிக்கையாண்டில் ரூ. 15,69,225/– வருவாய் பெறப்பட்டுள்ளது.

*(ஊ) நகரமைப்பு*

*விரிவு அபிவிருத்தி திட்டங்கள்*

திருச்செங்கோடு நகராட்சியின் முழுப் பகுதியும், திருச்செங்கோடு உள்ளூர் திட்டக்குழுமப் பகுதியாகும். இப்பகுதி முழுவதற்கும் நகர வளர்ச்சியைத் திட்டமிட்டு நிலப் பயன்பாடுகளை உத்தேசித்து முழுமைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டப் பகுதிக்குள் 12 விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 1, 2, 3, 4, 5, 6, 7 ஆகியவற்றிற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு நடைமுறையில் உள்ளன. விரிவு அபிவிருத்தித் திட்டம் எண்.11 & 12க்கு இணக்கம் அளிக்கப்பட்டு நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது.

மீதமுள்ள விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.8, 9, 10 மற்றும் முழுமைத் திட்டம் ஆகியவற்றின் தற்போதைய நிலை கீழ்க்கண்டவாறு விளக்கப்பட்டுள்ளன.

*முழுமைத் திட்டம்*

இந்நகராட்சிக்கு முழுமைத் திட்டம் தயாரித்து நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர், சேலம் அவர்களால் 2.8.94ம் தேதிய ந.க.எப்1/259/2004/சேதம3, எண் கடித வாயிலாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதன்மீது 6.9.84ம் தேதிய ந.க.எப்1/63234/84ன் கடித வாயிலாக நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 24ன்படி அரசின் இணக்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அரசு தனது 2.4.85ம் தேதியிட்ட உத்தரவில் முழுமைத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட வரைபடம் தமிழ்நாடு அரசிதழ் தினசரி நாளிதழ் ஆகியவற்றில் விளம்பரம் செய்யப்பட்டு பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட ஆலோசனைகள் ஆட்சேபணைகளின் மீது உள்ளூர் திட்டக்குழு பரிந்துரையுடன் அரசிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அரசாணை எண்.578, வீட்டு வசதி மற்றும் நகர அபிவிருத்தித்துறை, நாள் 16.7.93ல் இறுதி ஒப்புதல் பெறப்பட்டது. தமிழ்நாடு அரசிதழில் எண்.32, பகுதி–II பிரசுரிக்கப்பட்டுள்ளது. (பிரிவு–2 பக்க எண்.880, நாள் 18.8.93) நகர் ஊரமைப்புச் சட்டம் 1978 பிரிவு 32(2) பி–ன்படி முழுமைத் திட்டத்தை மறு ஆய்வு செய்து நகர் ஊரமைப்புச் சட்டம் 1988 பிரிவு 26ன்படி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன்படி தமிழ்நாடு அரசிதழ் பாகம்–4, பிரிவு–1, பக்கம் எண்.517, நாள் 29.8.2001ல் பிரசுரம் செய்யப்பட்டது. தினமலர் நாளிதழில் 28.10.2001ல் பிரசுரம் செய்யப்பட்டது.

மேலும், அதன் தொடர்ச்சியாக நாமக்கல் மாவட்ட அரசிதழ் எண்.3, நாள் 21.4.2002ல் பிரசுரம் செய்யப்பட்டது. நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 28ன்படி திருச்செங்கோடு உள்ளூர் திட்டக் குழுமத்திற்கு உட்பட்ட திருத்தி அமைக்கப்பட்ட மறு ஆய்வு முழுமைத் திட்டத்திற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம் என உள்ளூர் திட்டக்குழுமம் தனது தீர்மானம் எண்.6, நாள் 30.7.2003ல் ஒப்புதல் அளித்துள்ளது.

அதன்பேரில் நகர் ஊரமைப்பு ஆணையாளர், சென்னை அவர்களின் பரிந்துரையின்படி தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பதிவு 28ன் கீழ் திருத்தப்பட்ட முழுமைத் திட்டத்திற்கு 27.2.2008 அன்று அரசாணை எம்.எஸ்.எண்.40ல் (வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற அபிவிருத்தி துறை) அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட திருத்தப்பட்ட முழுமைத்திட்ட நகர் ஊரமைப்பு சட்டம் விபரத்தை தமிழ்நாடு அரசிதழில் 19.03.2008ல் வெளியிடப்பட்டுள்ளது. அதன் விபரத்தை 1971 பிரிவு எஸ் 15ன் கீழ் மாவட்ட அரசிதழ் மற்றும் தினசரி நாளிதழ் ஆகியவற்றில் வெளியீடு செய்ய 12.09.2014ல் நடவடிக்கை எடுக்கப்பட்டு முழுமைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

***<u>விரிவு அபிவிருத்தித் திட்டம் எண்.8</u>***

தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு.19(1)ன்படி, நகர் அபிவிருத்தித் திட்டம் உள்ளூர் திட்டக்குழுவின் தீர்மான எண்.2(15)ன்படி, நாள்: 27.2.89ல் இத்திட்டம் தயாரிக்கப்பட்டது. இத்திட்டம் கைலாசம்பாளையம் கிராமம், சர்வே எண்.37 மற்றும் 65 முதல் 88 வரை உள்ளடங்கிய நிலப்பரப்பாகும். இத்திட்டத்தை இறுதி ஒப்புதலுக்காக நகர ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம் அவர்களின் வாயிலாக நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. நகர் ஊரமைப்பு ஆணையாளர், சென்னை அவர்கள் தமது ந.க.எண்.19468/2008/டிபி1, எண்ணிட்ட 20.5.2009ம் தேதிய செயல்முறையின்படி நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 29ன் கீழ் ஒப்புதல் வழங்கியுள்ளார். இதனைத் தொடர்ந்து உள்ளூர் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட விபரத்தை தமிழ்நாடு அரசிதழில் 4.07.2010ல் வெளியீடு செய்யப்பட்டுள்ளது. அதன் விபரத்தை நகர் ஊரமைப்பு சட்டம் 1971 விதி 17ல் (1,2) ன் கீழ் பிரசுரம் செய்ய 30.07.2014ல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

***<u>விரிவு அபிவிருத்தித் திட்டம் எண்.9</u>***

தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 19(1)ன்படி, நகர் ஊரமைப்புத் திட்டம் உள்ளூர் திட்டக்குழுவின் தீர்மானம் எண்.3(16)ன்படி, 27.2.80ல் இத்திட்டம் தயாரிக்கப்பட்டது. இத்திட்டம் கைலாசம்பாளையம் கிராமம் சர்வே எண்.114 முதல் 118 வரை 130 மற்றும் 132 முதல்

149 வரை உள்ளடங்கிய நிலப் பரப்பில் அமைவதாகும். இத்திட்டத்தின் மொத்த பரப்பளவு 147.46 ஏக்கர்கள் கொண்டதாகும்.

நகர் ஊரமைப்பு இயக்குனர், சென்னை அவர்களின் செயலாணை எண்.12614/93/டிபி2, நாள் 2.12.93ன்படி இத்திட்டத்திற்கு இணக்கம் அளிக்கப்ட்டுள்ளது. தமிழ்நாடு அரசிதழில் 1.6.94ல் பகுதி–1, பிரிவு.1ல் பத்தி எண்.523ல் படிவம் எண்.9ஐ பிரசுரம் செய்யப்பட்டு நகர் ஊரமைப்பு இயக்குனர், சென்னை அவர்களின் இறுதி ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களால் ந.க.எண்.25907/2008/டிபி1 எண்ணிட்ட 11.12.2009ம் தேதிய செயலாணையின்படி இத்திட்டத்திற்கு பிரிவு 29ன்கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட விபரத்தை நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 17(1), (2)ன் கீழ் பிரசுரம் செய்ய 26.06.2012ல் நடவடிக்கை எடுக்கப்படுள்ளது.

***விரிவு அபிவிருத்தித் திட்டம் எண்.10***

தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 19(1)ன்படி, நாள் 27.2.80ல் இத்திட்டம் தயாரிக்கப்பட்டது. இத்திட்டம் கைலாசம்பாளையம் கிராமம், சர்வே எண்.156 முதல் 171 வரை 182 முதல் 187 வரை மற்றும் 203ல் சர்வே எண்களை உள்ளடங்கிய நிலப்பரப்பில் அமைவதாகும். இத்திட்டத்தில் மொத்த பரப்பளவு 129.84 ஏக்கர்கள் கொண்டதாகும். இத்திட்டத்தினை நகர் ஊரமைப்புச் சட்டம் 1971ல் பிரிவு 29ன் கீழ் நகர் ஊரமைப்பு இயக்குனர் அவர்களின் இறுதி ஒப்புதல் பெறும்பொருட்டு திருச்செங்கோடு உள்ளூர் திட்டக்குழு தீர்மானம் எண்.697ன்படி இறுதி ஒப்புதல் வழங்குமாறு கோரி தேவையான திட்ட அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ந.க.எண்.5313/2009/டிபி1, நாள் 9.1.2010ன்படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தொடர் நடவடிக்கையில் உள்ளது.

மேற்கண்ட திட்டம் ந.க.எண்.15876/10டி.பி.1–ன்படி நாள் 19.06.2012ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசிதழில் 14.11.2012ல் வெளியிடப்பட்டுள்ளது. நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 17 (1,2) ன கீழ் பிரசுரம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

***விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் எண்.13, 14, 15, 16, 17***

இந்நகராட்சிப் பகுதியில் புதிதாக 5 அபிவிருத்தி திட்டங்கள் தயாரிக்குமாறு 11.1.2005 அன்று நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.இதனைத் தொடாந்து நகர் ஊரமைப்புச் சட்டம் 1971, பிரிவு 19(1)ல் விரிவு அபிவிருத்தித் திட்டம் விதி 3(1)ன்படி படிவம்–1ல் அரசு அலுவலகங்களில் ஒட்டி பிரசுரம் செய்யப்பட்டது.

மேற்படி விரிவு அபிவிருத்தித் திட்டம் எண்.13, 14, 15, 16, 17 ஆகியவற்றை மாவட்ட அரசிதழில் 18.12.2009ம் தேதியிலும் தினசரி நாளிதழில் 18.12.2009ம் தேதியிலும் தினசரி நாளிதழில் 24.11.2009ம் தேதியிலும் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படடு வருகிறது.

***அ) வரம்பு கடப்புகள்***

| | | | |
|---|---|---|---|
| 1) | தொடக்கத்தில் இருந்த வரம்பு கடப்புகளின் எண்ணிக்கை | – | 12 |
| 2) | நடப்பு ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட வரம்பு கடப்புகள் எண்ணிக்கை | – | 48 |
| 3) | அகற்றப்பட்ட வரம்பு கடப்புகளின் எண்ணிக்கை | – | 48 |
| 4) | பட்டா வழங்க ஆட்சேபணை இல்லை என நகர்மன்றம் தீர்மானம் பெறப்பட்டவை. | – | – |
| 5) | நடப்பு ஆண்டில் நிலுவையில் இருந்த வரம்பு கடப்புகளின் எண்ணிக்கை. | – | 9 |
| 6) | வழக்கில் உள்ளவை | – | 3 |

**2019–2020–ல் பெறப்பட்ட கட்டிட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 150**

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட கட்டிட விண்ணப்பங்கள் | – | 144 |
| திருப்பப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் அனுமதி மறுக்கப்பட்ட விண்ணப்பங்கள் | – | 6 |
| மொத்தம் | – | 150 |

வசூலிக்கப்பட்ட கட்டணம் ரூ.24,01,861/– மனை முறைப்படுத்த தனி மனைக்கு வரப்பெற்ற விண்ணப்பம் 106, வளர்ச்சி கட்டணம் ரூ.18,56,470/– வசூலிக்கப்பட்டுள்ளது. மனைப்பிரிவு விண்ணப்பங்கள் 2 அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வசூலிக்கப்பட்ட தொகை ரூ.59,500/–.

*பொது வருவாய்*

***1) வருவாய் கணக்கு***

இந்நகராட்சியில் உள்ள வீடுகளுக்கும், பின்வரும் விபரப்படி சொத்து வரி விதிக்கப்படுகிறது.

| | | | கட்டிடங்களின் மீது ஆண்டுக்கு |
|---|---|---|---|
| 1) | பொதுவரி | – | 4.25% |
| 2) | தண்ணீர் வரி | – | 7.25% |
| 3) | கல்வி வரி | – | 2.50% |
| 4) நூல்நிலைய வரி, கல்வி வரி நீக்கி மொத்த வரியில் ரூபாய்க்கு 10 பைசா வீதம் 1.4.92 முதல் வசூலிக்கப்படுகிறது. | | | |

***<u>2019–2020ல் கிடைத்த அரசு மான்யம், உதவித் தொகைகள் பின்வருமாறு</u>***

| வ.எண் | விவரம் | | ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|
| 1) | 14 வது நிதிக்குழு மான்யம் | | 215.99 |
| 2) | ஒருங்கிணைந்த வளர்ச்சி திட்டம் (IUDM) | | 148.55 |
| 3) | நமக்கு நாமே திட்டம் (SSS GRANT) | | 7.93 |
| 4) | தூய்மை இந்தியா திட்டம் | | 108.63 |
| 5) | சட்டமன்ற உறுப்பினர் நிதி | | 41.00 |
| 6) | குடிநீர் திட்ட மான்யம் | | 4250.00 |
| 7) | பாராளுமன்ற உறுப்பினர் நிதி | | 8.96 |
| | மொத்தம் | | 4781.06 |

***<u>வரிவசூல் 2019–2020ம் ஆண்டிற்கான வரிவசூல் விபரம்</u>***

| | | | |
|---|---|---|---|
| கேட்பு | நிலுவை | – | 1177.40 |
| | நடப்பு | – | 1180.45 |
| | **மொத்தம்** | – | **2357.85** |
| வசூல் | நிலுவை | – | 317.52 |
| | நடப்பு | – | 895.44 |
| | **மொத்தம்** | – | **1212.96** |
| நிலுவை | நிலுவை | – | 859.88 |
| | நடப்பு | – | 285.01 |
| | **மொத்தம்** | | **1144.89** |

***<u>தணிக்கைத் தடை நிவர்த்தி</u>***

தணிக்கை ஆண்டு முடிய கீழ்க்கண்ட விபரப்படி தணிக்கைத் தடைகள் நிலுவையாக உள்ளது.

| | | |
|---|---|---|
| பொது நிதி | – | 164 |
| கல்வி நிதி | – | 39 |
| குடிநீர் வடிகால் நிதி | – | 62 |
| தணிக்கை குறிப்பு | – | 48 |
| சொத்துவரி சீராய்வு தணிக்கை குறிப்பு | – | 8 |
| **மொத்தம்** | – | **<u>321</u>** |

நிலுவையில் உள்ள தணிக்கைத் தடைகளை நிவர்த்தி செய்ய பதில்கள் தயார் செய்யப்பட்டுள்ளது. கூட்டமர்வு நடக்கும் சமயம் அதிகப்படியான தணிக்கைத் தடைகள் நிவர்த்தி செய்யப்படும்.

***<u>அரசுக் கடன்கள் திருப்பி செலுத்திய விபரம் 2019–2020</u>***

| | | |
|---|---|---|
| UIDSSMT குடிநீர் திட்டம் | _ | ரூ. 99,63,195 |
| அரசு கடன் | – | ரூ. 20,00,000 |
| **மொத்தம்** | – | **ரூ.1,19,63,195 /–** |

***<u>வழக்குகள்:–</u>***

***<u>அறிக்கையாண்டில் வழக்குகளின் விபரம்</u>***

| | | |
|---|---|---|
| **1.4.2019–ந்** தேதியில் நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை | – | 43 |
| அறிக்கையாண்டில் தொடரப்பட்ட வழக்குகள் | – | 6 |
| மொத்தம் | – | 49 |

***தணிக்கை***

அறிக்கையாண்டில் சென்ற ஆண்டு தணிக்கையின் முடிவு பொதுவாக திருப்திகரமாக உள்ளது எனக் கருதப்பட்டது. ஆண்டு இறுதியில் தொகை பட்டுவாடா செய்யப்பட வேண்டிய பட்டியல் ஏதும் இல்லை.

***2019–2020ம் ஆண்டின் முடிவான வரவு, செலவு விபரங்கள் பின்வருமாறு***

| | | |
|---|---|---|
| | | ரூ. லட்சத்தில் |
| **2019–2020ம் ஆரம்ப இருப்பு** | **–** | **1008.70** |
| வரவு | **–** | **2630.22** |
| மொத்தம் | **–** | **3638.92** |
| செலவு | **–** | **3062.63** |
| முடிவிருப்பு | **–** | **576.29** |

***கொடிநாள்***

கொடிநாள் இழக்கு தணிக்கையாண்டில் ரூ. **3.30** லட்சம் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டது. தணிக்கையாண்டில் இலக்கு எட்டப்பட்டுள்ளது.

***நிர்வாகம்***

அறிக்கையாண்டில் இந்நகராட்சி நிர்வாகம் நல்ல முறையில் நடந்தது. நகராட்சி ஆணையர், நகராட்சிப் பொறியாளர், இதர அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஒத்துழைமையுணர்வுடன் பணிபுரிந்தனர்.

ஆணையாளர்
திருச்செங்கோடு நகராட்சி.